கிறார்கள். இரண்டாவதாக, ஒரு ஆண்டு அவசரத் தேவைக்கு ஆயிரம் ரூபாய்க்குத்தான் மருந்துகள் வாங்கலாம் என்ற ஒரு விதி இருக்கிறது. அது காணாது என்ற கருத்தும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசுகிற நேரத்தில் [*] என்ற வார்த்தையை உபயோகித்திருக்கிறார்கள். அது பாராளுமன்ற நடைமுறைக்கு ஒத்த வார்த்தையாக இல்லை என்று நான் கருதுவதால் அதை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

5. அறிவிப்பு

தமிழ்நாடு 1973-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1973-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.